**கவனிக்க.**- 2011.01.21 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1691 - 2011 ජනවාරි මස 28 වැනි සිකුරාදා - 2011.01.28

*1691 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 105 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்***. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2011, பெப்புருவரி மாதம் 03 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, சனவரி மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பதவிகள் - வெற்றிடம்

## ஜெனரல் சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்

### பட்டப்படிப்புப் பயிற்சி (ஆண்/பெண்)

ஜெனரல் சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு பயிற்சிக்காக பொருத்தமான தகுதிவாய்ந்த இலங்கையர்களிடமிருந்து (ஆண்/பெண்) விண்ணப்பங்கள் 2011, சனவரி 2 ஆந் திகதி முதல் 2011, பெப்புருவரி 2 ஆந் திகதிவரை கோரப்படுகின்றன.

2. பட்டத்திட்டங்கள் தொடர்பிலான கற்கைகளின் நூற்கல்வி மற்றும் இராணுவ கூறுகள் ஆகியவற்றை வெற்றிகரமாக முடித்தவர்களுக்கு 1981 ஆம் ஆண்டின் ஜெனரல் சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் கல்வி நிறுவனச் சட்டம் இல. 68 மற்றும் மேலும் பின்தொடர்கிற திருத்தங்கள் ஆகியவற்றினால் பட்டங்களை வழங்குவதற்கு ஜெனரல் சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

3. இப்பயிலுனர்களுக்கு பிரயோகிக்கத்தக்க பட்டத் திட்டங்கள் மருத்துவப் பிரிவுக்கு ஐந்து வருட காலத்தையும், சட்டப் பிரிவுக்கு நான்கு வருட காலத்தையும், முகாமைத்துவ, தொழில்நுட்பச் சேவைகள், தேவைகள் விநியோகங்கள் ஒழுங்கமைப்பு முகாமைத்துவம் மற்றும் சமூகக் கற்கைகள் ஆகிய பிரிவுகளுக்கு மூன்று வருட காலத்தையும் கொண்டிருக்கும்.

3.1 தெரிவுக்காக நடத்தப்படும் மூன்று நேரடிப் பரீட்சைகளில் பெறப்படும் சராசரி புள்ளிகளினதும் மற்றும் ஒவ்வொரு படையில் கிட்டுகின்ற வெற்றிடங்களினதும் மீது மூன்று படைகளுக்கான பயிலுனர்களின் ஒதுக்கீடு அடிப்படையைக் கொண்டிருக்கும். பட்டத் திட்டங்களை வெற்றிகரமாக முடித்துக்கொண்ட பின்னர் இலங்கை இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை ஆகியவற்றின் கிரமமான படைகளில் பயிலுனர்கள் பாரப்படுத்தப்படுவார்கள்.

3.2 பட்டத் திட்டங்களின் நூற்கல்வி மற்றும் இராணுவப் பயிற்சி கூறுகளை வெற்றிகரமாக முடிக்கின்றதன் மீது, பிரயோகிக்கத் தக்கவாறு மருத்துவம் மற்றும் சத்திர சிகிச்சையில் இளமாணி (எம். பீ. பீ. எஸ்.), எந்திரவியல், முகாமைத்துவ, தொழில் நுட்பச் சேவைகள், தேவைகள் விநியோகங்கள் ஒழுங்கமைப்பு முகாமைத்துவம் மற்றும் சமூகக் கற்கைகள் ஆகியவற்றில் விஞ்ஞான இளமாணி (பீ. எஸ்சி.) பட்ட அல்லது சட்டத்தில் இளமாணி ஆகியன உத்தியோகத்தர் பயிலுனர் களுக்கு வழங்கப்படும்.

3.3 சகல பட்டத் திட்டங்களும் ஆங்கில மொழியில் நடத்தப்படும்.

3.4 தெரிவுசெய்யப்படும் தேருநர்கள் பின்வரும் இளமாணிப் பட்டத் திட்டங்களில் ஒன்றைப் பின்பற்ற வேண்டும்.

(அ) மருத்துவம் மற்றும் சத்திரசிகிச்சை இளமாணி (எம். பீ. பீ. எஸ்.) - ஐந்தரை வருட பாடநெறி (ஆண் மட்டும்).- 2010 இல் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞான பாடங்களில் (உயிரியல், இரசாயனவியல் மற்றும் பௌதீகவியல்) சித்தியடைந்தவர்களுக்கு.

(ஆ) சிவில்/பொறிமுறை/மின் மற்றும் இலத்திரனியல் மற்றும் கடல்சார் மற்றும் விமானமோட்டுதல் பாடங்களில் விஞ்ஞான (பீ.எஸ்சி.) எந்திரவியல் இளமாணி- நான்கு வருட பாடநெறி (ஆண் மட்டும்).- க. பொ. த. (உ. த.) பரீட்சையில் கணிதப் பாடங்களில் (இரசாயனவியல், பௌதீகவியல், இணைந்த கணிதம் சித்தியடைந்தவர்களுக்கு.

(இ) சட்டத்தில் இளமாணி (எல்எல்.பீ) - நான்கு வருட பாடநெறி (ஆண் மற்றும் பெண்).- க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பின்வரும் மூன்று (3) பாடங்களில் சித்தியடைந்தவர்களுக்கு :

| | | |
|---|---|---|
| கணக்கியல் | அரசியல் விஞ்ஞானம் | கமத்தொழில் விஞ்ஞானம் |
| புவியியல் | உயிரியல் | உயர்தர கணிதம் |
| வியாபார புள்ளி விபரவியல் | வரலாறு | வியாபாரக் கற்கைகள் |
| இரசாயனவியல் | பௌதீகவியல் | பொருளியல் |
| சிங்களம்/தமிழ் | ஆங்கிலம் | |
| தர்க்கவியல் மற்றும் விஞ்ஞான ரீதியான முறை | | |
| கணிதம்/இணைந்த கணிதம் | | |

(ஈ) விஞ்ஞான இளமாணி (பீ. எஸ்சி.) - முகாமைத்துவ தொழில் நுட்ப விஞ்ஞானங்கள்.- மூன்று வருட பாடநெறி (ஆண் மட்டும்).- க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானம் அல்லது கணிதப் பிரிவில் சித்தியடைந்த வர்களுக்கு.

(உ) விஞ்ஞான (பீ. எஸ்சி.) தேவைகள் விநியோகங்கள் ஒழுங்கமைப்பு முகாமைத்துவம் - மூன்று வருடப் பாடநெறி (ஆண் மற்றும் பெண்).- க. பொ. த. (உ. த.) பரீட்சையில் வர்த்தப் பிரிவில் சித்தியடைந்து பின்வரும் மூன்று (3) பாடங்கள் சித்தியடைந்தவர்களுக்கு :

| | |
|---|---|
| கணக்கியல் | வியாபாரக் கற்கைகள் |
| புவியியல் | தர்க்கவியல் மற்றும் விஞ்ஞான முறை |
| பொருளியல் | தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கைகள் |
| வியாபாரப் புள்ளி விபரவியல் | பொதுத் தகவல் தொழில்நுட்பம் |

(ஊ) விஞ்ஞான (பீ. எஸ்சி.) சமூகக் கற்கைகளில் இளமாணி - மூன்று வருடப் பாடநெறி (ஆண் மற்றும் பெண்).- க. பொ. த. (உ.த.) பரீட்சையில் பின்வரும் பாடங்களில் ஆகக்குறைந்தது இரண்டு (2) உட்பட சகல மூன்று (3) பாடங்களிலும் சித்தியடைந்தவர்களுக்கு :

| | |
|---|---|
| புவியியல் | வியாபாரப் புள்ளிவிபரவியல் |
| பொருளியல் | தர்க்கவியல் மற்றும் விஞ்ஞான முறை |
| வரலாறு | தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கைகள் |
| ஆங்கிலம் | பொதுத் தகவல் தொழில்நுட்பம் |
| கணிதம் | அரசியல் விஞ்ஞானம் |
| வியாபாரக் கற்கைகள் | |

3.5 தெரிவுசெய்யப்பட்ட தேருனர்கள் ஆங்கிலம், முகாமைத்துவம், சட்டம், சர்வதேசக் கற்கைகள் மற்றும் இராணுவப் பாடங்கள் உட்பட சம்பந்தப்பட்ட பட்டத் திட்டங்கள் தொடர்பிலான பலதரப்பட்ட பொதுவானதும், விசேடமானதுமான பாடங்களைப் பின்பற்றுமாறு வேண்டப்படுகின்றனர்.

3.6 தமது பட்டத் திட்டங்களின்போது, பௌதீக அபிவிருத்தி, தேகாப்பியாசம், ஆயுதப் பயிற்சி மற்றும் தலைமைத்துவம் ஆகியவற்றில் தொடர்ச்சியான பயிற்சியை மேற்கொள்வதற்கும் அவர்கள் வேண்டப்படுகின்றார்கள்.

**4. தகுதிக்கான தேவைகள் :**

**தேருனர்கள்-**

(அ) இலங்கையின் பிரஜையொருவராக இருக்க வேண்டும்.

(ஆ) 2011, பெப்புருவரி 2 ஆந் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும், 22 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

(இ) பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியைக் கொண்டிருப்பதுடன், பின்வரும் தேவைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும் :-

(i) சாதாரண பொதுச்சோதனையில் சித்தி.
(ii) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழிப் பாடத்திற்கு குறைந்தபட்சம் விசேட சித்தியை (சீ) கொண்டிருக்க வேண்டும்.

(ஈ) பின்வரும் குறைந்தபட்ச பௌதீக நியமங்களைத் திருப்திப்படுத்த வேண்டும் :

| | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|
| உயரம் | - இராணுவம் | : 5'6" | இராணுவம் | : 5' |
| | - கடற்படை | : 5.6" | விமானப்படை | : 5'4" |
| | - விமானப்படை | : 5'6" | | |
| நிறை | - 50 கி. கி. | | | |
| மார்பளவு | - 32" (விரியாத) | | | |

**குறிப்பு**.- (விளையாட்டில் அல்லது வேறு சம்பந்தப்பட்ட துறைகளில் முதன்மையான சாதனைகளைத் தேருனர் ஒருவர் கொண்டிருந்தால், பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினாலும் மற்றும் ஜெனரல் சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சபையின் தலைவரினாலும் மேற்படி பௌதீக நியமங்கள் தளர்த்தப்பட முடியும்).

(உ) அவசியப்படும் மருத்துவ நியமங்களுக்கு இணங்குதல்.- பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினதும் மற்றும் ஜெனரல் சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சபையின் தலைவரினதும் திருப்திக்கு ஏற்ப மருத்துவச் சோதனையொன்றில் சித்தியடையுமாறு வெற்றிகரமான தேருனர்கள் வேண்டப்படுகின்றனர்.

(ஊ) திருமணம் செய்யாதிருத்தல்.- (பயிற்சியின் கீழ் உள்ள வேளையில் திருமணம் செய்வதற்கும் அத்துடன் படை ஒழுங்குவிதிகளினால் அவ்வாறு செய்வதற்கு அனுமதியளிக்கப்படும் வரையும் பயிற்சி உத்தியோகத்தர் திருமணம் செய்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.)

5. **சேவையின் நிபந்தனைகள்**.- ஜெனரல் சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகததின் உத்தியோகத்தர் பயிற்சியாளர்களாக தெரிவுசெய்யப்பட்ட தேருனர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். அவர்கள் 1981 இன் ஜெனரல் சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு கல்வி நிறுவனச் சட்டம் இல. 68 மற்றும் மேலும் பின்தொடர்பிற திருத்தங்கள் ஆகியவற்றின்கீழ் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகள் ஆகியவற்றுக்கு உட்படுவார்கள்.

6. சம்பந்தப்பட்ட பட்டத் திட்டங்களில் பட்டத்தைப் பெற்ற பின்னர் சேர்ந்துகொள்ளும் நேரத்தில் தெரிவுசெய்யப்பட்ட தேருனர்கள் அவர்கள் பதவிக்கு அமர்த்தப்பட்ட படையில் பாரப்படுத்தப்பட்ட பின்னர், பிரயோகிக்கத்தக்கவாறு கட்டாயமான காலமொன்றுக்கு சேவையாற்றுவதற்கு இலங்கையின் சனநாயக சோசலிசக் குடியரசுடன் ஒப்பந்தமொன்றையும், உடன்படிக்கையொன்றையும் செய்துகொள்ள வேண்டும்.

7. மாதமொன்றுக்கு அண்ணளவாக ரூபா 24,000 கொண்ட சம்பளமும், படியும் உத்தியோகத்தர் பயிலுனர்களுக்கு கொடுப்பனவு செய்யப்படும். இதற்கு மேலதிகமாக, உத்தியோகத்தர் பயிலுனர்களுக்கு கட்டணமின்றி பின்வரும் வசதிகள் கிடைக்கச்செய்யப்படும் :-

(i) உணவு மற்றும் தங்குமிடம்
(ii) மருத்துவ வசதிகள்
(iii) சீருடைகள்
(iv) அதிகாரியின் வேலையாள் வசதிகள்
(v) விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு வசதிகள்

8. இலங்கை இராணுவம், கடற்படை அல்லது விமானப்படை ஆகியவற்றின் கிரமமான படைகளுக்கு பாரப்படுத்தப்பட்டதன் மீது, சேவைக் கொடுப்பனவு சட்டக்கோவைகளின் பிரகாரம் வரிசைப் பதவிக்கு பிரயோகிக்கத்தக்க சம்பளமும், படிகளும் அவர்களுக்கு கொடுப்பனவு செய்யப்படும் :-

(அ) **லெப்டினன்ட் கேணல்/கொமாண்டர்/விங் கொமாண்டர் ஆகிய வரிசைப் பதவி வரையிலான உத்தியோகத்தர்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட சம்பள விகிதங்கள் வருமாறு** :-

2/லெப்./பைலட் உத்தியோகத்தர்.- வருடமொன்றுக்கு ரூபா 2,11,800
பதில் துணை லெப்.- வருடமொன்றுக்கு ரூபா 1,89,240
லெப்டினன்ட்.- வருடமொன்றுக்கு ரூபா 2,75,220-30 X 7,740- ரூபா 5,07,420

*துணை லெப்டினன்ட்.*- வருடமொன்றக்கு ரூபா 2,75,220-30 X 7,740-ரூபா 5,07,420

*பறத்தல் உத்தியோகத்தர்.*- வருடமொன்றுக்கு ரூபா 2,75,220-34 X 7,740-ரூபா 5,38,380

*கப்டன்/லெப்டினன்ட்.*- வருடமொன்றுக்கு ரூபா 3,21,660-24 X 7,740-ரூபா 5,07,420

*பறத்தல் லெப்டினன்ட்.*- வருடமொன்றுக்கு ரூபா 3,21,660-28 X 7,740-ரூபா 5,38,380

*மேஜர்.*- வருடமொன்றுக்கு ரூபா 3,68,100-22 X 7,740-ரூபா 5,38,380

*லெப்டினன்ட் கொமாண்டர்.*- வருடமொன்றுக்கு ரூபா 3,52,620-20 X 7,740-ரூபா 5,07,420

*ஸ்குவட்ரன் லீடர்.*- வருடமொன்றுக்கு ரூபா 3,52,620-24 X 7,740-ரூபா 5,38,380

*லெப். கேணல்.*- வருடமொன்றுக்கு ரூபா 3,90,540-17 X 9,480-ரூபா 5,51,700

*கொமாண்டர்.*- வருடமொன்றுக்கு ரூபா 3,62,100-15 X 9,480-ரூபா 5,04,300

*விங் கொமாண்டர்.*- வருடமொன்றுக்கு ரூபா 3,62,100-20X9,480-ரூபா 5,51,700

(ஆ) பின்வரும் படிகள் மாதாந்தம் கொடுப்பனவுக்குரியதாகும் :

(i) தகுதிப்படி
(ii) பங்கீட்டுப் படி
(iii) உள்ளே வாழுமாறு கட்டளையிடப்படும்போது தொந்தரவுப்படி (திருமணமான உத்தியோகத்தர்களுக்கு மட்டும்)
(iv) சீருடைப் பராமரிப்புப் படி

(இ) பின்வரும வசதிகள் கிடைக்கும்/படிகள் கொடுப்பனவுக் குரியவையாகும் :-

(i) உள்ளே வாழுமாறு கட்டளையிடும்போது இடவசதி
(ii) வாடகைப்படி
(iii) சீருடைப்படி
(iv) அதிகாரியின் வேலையாட்கள் படி
(v) "உள்ளே வாழுமாறு" கட்டளையிடப்பட்டவர்களுக்கு வேலை செய்யுமிடத்திலிருந்து வீடு இருக்கும் நிலையத்திற்கு ஒரு மாதத்திற்கு ஒரு மீளத்திரும்பும் கடமை ஆணைச்சீட்டு

9. அவர்களது சம்பள எதிர்காலங்களினதும், சேவையின் நிபந்தனைகளினதும் தொடர்பில் பின்வரும் ஒழுங்குவிதிகளினால் இராணுவ/ கடற்படை/விமானப்படையின் உத்தியோகத்தர்கள் ஆட்சிப்படுத்தப் படுவார்கள் :-

(i) இராணுவ/கடற்படை/விமானப்படை வேதன சட்டக்கோவை

(ii) இலங்கை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இராணுவ/ கடற்படை/ விமானப்படை உத்தியோகத்தர்களுக்கான நடைமுறையிலான ஒழுங்குவிதிகள்

(iii) இலங்கை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நடைமுறையிலான இராணுவ/ கடற்படை/ விமானப்படை ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடைகள் சட்டக்கோவை

10. பயிற்சியின்போது, ஜெனரல் சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் உப வேந்தரினாலும், அத்துடன் அல்லது சம்பந்தப்பட்ட சேவை கொமாண்டர்களினாலும் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய பயிற்சியை மேற்கொள்வதற்கு உத்தியோகத்தர் பயிற்சியாளர்கள் அவசியப்படுத்தப்படுகின்றனர்.

11. பயிற்சியின் கீழுள்ள உத்தியோகத்தர் பயிற்சியாளர்கள் இலங்கையின் அல்லது வெளிநாட்டின் ஏதாவது பகுதிக்கு பயிற்சிக்காக அனுப்பப்படுவதற்கு பாத்திரவாளியாவார்கள்.

12. உள்ளே வாழ்வதற்கு வழங்கப்பட்டுள்ள இடவசதியில் வாழுமாறும், ஜெனரல் சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தினால் அல்லது சம்பந்தப்பட்ட படைத் தாபனங்களினால் முன்வைக்கப்பட்டுள்ள வழக்கமான வேலை முறையை பின்பற்றுமாறும் உத்தியோகத்தர் பயிற்சியாளர்கள் கேட்கப்படுவார்கள்.

13. **மொழி தேவைப்பாடுகள்.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மொழிக் கொள்கைக்கு பயனை வழங்குவதற்காக ஏற்கனவே செய்யப்பட்ட அல்லது இதன் பின்னகத்து செய்யப்படவுள்ள ஏதாவது விதிகளுடனும், ஒழுங்குவிதிகளுடனும் இணங்குமாறு தெரிவுசெய்யப் பட்ட தேருனர்கள் கேட்கப்படுவார்கள்.

14. **ஆளடையாளத்தினை நிரூபித்தல்.**- தமது ஆள் அடையாளத்தினை நிரூபிப்பதற்கான சான்றினைச் சமர்ப்பிக்குமாறு தேருனர்கள் கேட்கப்படுவார்கள். இந்நோக்கத்திற்கு ஆட்கள் பதிவுத் திணைக்களத்தினால் அல்லது தபால் மா அதிபரினால் வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டைகளும் மோட்டார் வாகனங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்டுள்ள வாகன மோட்டார் உத்தரவுப்பத்திரமும் ஏற்றுக்கொள்ளப்படும்.

15. விண்ணப்பங்கள் பல்கலைக்கழகத்தின் www.kdu.ac.lk என்ற இணைய தளத்திலிருந்து விண்ணப்பப்படிவமும், விபர மஞ்சரியும் கீழிறக்கப்பட முடியும்.

16. மொறட்டுவை, இலங்கை வங்கி, இடம கிளையின் நடைமுறைக் கணக்கு இலக்கம் "681950" க்கு வரவு வைக்கப்படுவதற்கு "ஜெனரல் சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின்" சார்பில் இலங்கை வங்கியின் ஏதாவது கிளைக்கு ரூபா 600 ஐ (அறுநூறு ரூபா) கொடுப்பனவு செய்வதன் மூலம் பெறப்பட்ட பற்றுச்சீட்டொன்று சரிவர முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களுடன் இணைத்து வைத்திருக்கப்பட வேண்டும். அடிப்படை தகுதியற்ற விண்ணப்பதாரிகளும் சரிவர நிரப்பப்படாததும், இத்தகவலின் நிபந்தனைகளின் பிரகாரம் இல்லாததுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது.

*17.* சரிவர முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பிரதியொன்றுடன் 2011, பெப்புருவரி 2 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் பதிவுத்தபாலின் மூலம் ''பதிவாளர், ஜெனரல் சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம், கந்தவள தோட்டம், இரத்மலானை'' என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும். உறையின் மேல் இடதுகை மூலையின் மீது ''பயிற்சிக்கான விண்ணப்பம்'' மற்றும் விண்ணப்பித்துள்ள பிரிவு ஆகியன குறிக்கப்பட்டிருக்க வேண்டும். இறுதித் திகதியின் பின் கிடைக்கின்ற அல்லது இந்த அறிவித்தல்களின் தேவைப்பாடுகளுக்கு இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

*18.* பிறப்புப் பதிவின் சான்றுப்பத்திரங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள், க. பொ. த. (சா. த.) மற்றும் க. பொ. த. (உ. த.) பெறுபேற்றுத் தாள்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் மற்றும் பல்கலைக்கழக அனுமதிக்கான (ஆம்) தகுதிக்கான சான்றுப்பத்திரத்தின் கடிதம் ஆகியவற்றுடன் விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும்.

*19.* ஜெனரல் சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவச் சபையினால் நியமிக்கப்பட்ட தெரிவுக் குழுவினால் நிர்ணயிக்கப்பட்டவாறு மதிப்பாய்வு மூலப்பிரமாணத்தின் பிரகாரம் அவசியப்பட்ட நியமங்களைச் சாதித்த தேருனர்கள் மத்தியிலிருந்து பூர்வாங்க தெரிவுசெய்யப்படும். தெரிவுசெய்யப்பட்ட தேருனர்கள் ஜெனரல் சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவச் சபையினால் குறித்துரைக்கப் பட்டவாறு சோதனைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுவார்கள். ஜெனரல் சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவச் சபையினால் நியமிக்கப்பட்ட இறுதித் தெரிவுக் குழுவினால் இறுதித் தெரிவுசெய்யப்படும்.

*20.* நேர்முகப் பரீட்சைகளுக்கும், சோதனைகளுக்கும் தெரிவுசெய்யப் படும் தேருனர்களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைகளின் இடங்கள், நேரங்கள் மற்றும் திகதிகள் ஆகியவற்றையிட்டு எழுத்தில் அறிவிக்கப்படும். இந்நோக்கத்திற்கு விண்ணப்பதாரிகளுக்கு பிரயாண அல்லது வேறு செலவினங்கள் கொடுப்பனவு செய்யப்படமாட்டா.

*21.* தேருனர் ஒருவரை சிபார்சு செய்வதற்கு யாரேனும் ஒருவர் விரும்பினால், அவருக்கு நற்சான்றிதழை வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்ய வேண்டும். ஏதாவது வகையில் ஆதரவு திரட்டுதல் தகைமை நீக்கமாக விளங்கும்.

*22.* விண்ணப்பங்களின் பெறுகை கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பங்களின் நிராகரிப்பு தொடர்பில் கடிதப் போக்குவரத்து அல்லது விசாரணைகள் வரவேற்கப்படமாட்டாது.

கோத்தாபய நந்தசேன ராஜபக்ஷ
ஆர்டபிள்யூபீ, ஆர்எஸ்பீ பிஎஸ்சீ
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு மற்றும்
தலைவர்,
முகாமைத்துவச் சபை,
ஜெனரல் சேர். ஜோன் கொத்தலாவல
பாதுகாப்புப் பல்கலைக்கழகம்.

---

(அலுவலக உபயோகத்திற்கு)

**ஜெனரல் சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்**

பட்டதாரி மாணவர் பயிலுனர்களுக்கான விண்ணப்பம்

தே. அ. இலக்கம்

அக்கறையிலான துறை :

| எம்.பீ.பீ.எஸ். | எந்திர வியல் | முகாமைத் துவம், தொழில் நுட்பம் | சட்டம் | தேவைகள் விநியோ கங்கள் ஒழுங்க மைப்பு முகா மைத்துவம் | சமூக விஞ் ஞானங் கள் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

(தகைமைகளின் பிரகாரம், பொருத்தமான கூட்டினுள் 1, 2, 3 என இடுவதன் மூலம் மூன்று விருப்புக்களை குறித்துக்கொள்ளலாம்.)

1. பெயர் (குடித்த எழுத்துக்களில்) :

(அ) முழுப் பெயர் :

(ஆ) முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./திருமதி) :

2. (அ) நிரந்தர விலாசம் :

(ஆ) தொலைபேசி இலக்கம் (வதிவிட) :

கைத்தொலைபேசி இலக்கம் :

3. பிறந்த திகதி :

வருடம் மாதம் திகதி

4. 2011.02.02 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

5. விவாக நிலை :

| விவாகமானவர் | தனித்த |
|---|---|
| | |

6. பால் :

| ஆண் | பெண் |
|---|---|
| | |

7. இலங்கைப் பிரசாவுரிமை-

பரம்பரையினால் ☐ பதிவினால் ☐

8. கல்வித் தகைமை :

(அ) க. பொ. த. (சா. த.) :----.

பாடசாலையின் பெயர் :----.
சுட்டிலக்கம் :----.
வருடம் :----.

| பாடம் | பெறுபேறு |
|---|---|
| 1. .............................. | .................... |
| 2. .............................. | .................... |
| 3. .............................. | .................... |
| 4. .............................. | .................... |
| 5. .............................. | .................... |
| 6. .............................. | .................... |
| 7. .............................. | .................... |
| 8. .............................. | .................... |
| 9. .............................. | .................... |

(ஆ க. பொ. த. (உ த.) :----.

பாடசாலையின் பெயர் :----.
சுட்டிலக்கம் :----.
வருடம் :----.

| பாடம் | பெறுபேறு |
|---|---|
| 1. .............................. | .................... |
| 2. .............................. | .................... |
| 3. .............................. | .................... |
| 4. ஆங்கிலம் | .................... |

பொது சாதாரணப் பரீட்சைப் புள்ளி ☐

பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்றுள்ளீர்களா ?

| | |
|---|---|
| | |

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழிக்கு பெறப் பட்ட ஆகக்கூடுதலான பெறுபேறு : ☐

சுட்டிலக்கம் : ☐ ஆண்டு : ☐ Z புள்ளி ☐

9. பிரதிநிதித்துவப்படுத்திய விளையாட்டு :

| | *பா.ம. | *வ.ம. | *தே.ம. | *ச.ம. |
|---|---|---|---|---|
| (அ) மெய்வல்லுனர் | | | | |
| (ஆ) பட்மின்டன் | | | | |
| (இ) கூடைப்பந்து | | | | |
| (ஈ) கிரிக்கெட் | | | | |
| (உ) ஹொக்கி | | | | |
| (ஊ) ரக்பீ | | | | |
| (எ) கால்பந்தாட்டம் | | | | |
| (ஏ) நீச்சல் | | | | |
| (ஐ) டேபிள் டென்னிஸ் | | | | |
| (ஒ) டென்னிஸ் | | | | |
| (ஓ) கரப்பந்தாட்டம் | | | | |
| (ஔ) மல்யுத்தம் | | | | |
| (ஃ) கராத்தே | | | | |
| (க) ஜூடோ | | | | |
| (கா) குத்துச்சண்டை | | | | |
| (கி) ஸ்குவாஷ் | | | | |
| (கீ) | | | | |
| (கு) | | | | |

10. மேலதிக தகைமைகள் :

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) கடேற் | | | | |
| (ஆ) சாரணர் இயக்கம் | | | | |
| (இ) மாணவர் தலைவர் | | | | |
| (ஈ) பாடசாலை கப்டன் | | | | |
| (உ) இல்ல கப்டன் | | | | |
| (ஊ) பாண்ட் | | | | |
| (எ) சங்கங்கள் | | | | |
| (ஏ) முதலுதவி | | | | |
| (ஐ) | | | | |
| (ஒ) | | | | |

11. உடல் கட்டமைப்பு :

| உயரம் | நிறை | கண் பார்வை | | | மார்பளவு |
|---|---|---|---|---|---|
| அடி அங். | இறா. | இடது | வலது | மூக்குக் கண்ணாடிப் பாவனை | அங். |
| | | | | | |

*பா.ம. - பாடசாலை மட்டம் *வ.ம. - வலய மட்டம்
*தே.ம. - தேசிய மட்டம் *ச.ம. - சர்வதேச மட்டம்

12. ஏதாவது வேறு சம்பந்தப்பட்ட உண்மைகள் :----.
(தேவைப்பட்டால் புறம்பான தாளொன்றை தயவுசெய்து இணைக் கவும்.)

13. இரு உறவு முறையற்ற உறுதிப்படுத்துபவர்களின் விபரங்கள் :

(I)

| பெயர் | பதவிப்பெயர் | விலாசம் | தொலைபேசி இல.: |
|---|---|---|---|
| | | | |

(II)

| பெயர் | பதவிப்பெயர் | விலாசம் | தொலைபேசி இல.: |
|---|---|---|---|
| | | | |

14. தயவுசெய்து இலங்கை வங்கியின் ஏதாவது கிளையினூடாக "உப வேந்தர், சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழகம்" என்னும் முகவரிக்கு ரூபா 600 ஐ (அறுநூறு ரூபா) "இடம" கிளைக்கு நடைமுறைக் கணக்கு இல. 9405831 இல் வைப்பிலிடுவதுடன், பின்வரும் விபரங்களைச் சமர்ப்பிக்கவும் (இதனகத்து மூலத்திலான பற்றுச்சீட்டு இணைக்கப்பட வேண்டும்.)

(i) பணம் வைப்பிலிட்ட திகதி :----.
(ii) பணம் வைப்பிலிட்ட இலங்கை வங்கிக் கிளை :----.

15. எனது சிறந்த அறிவுக்கேற்ப மேலே வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதெனவும், செம்மையானதெனவும் கௌரவத்துடன் நான் வெளிப்படுத்துகின்றேன். எனது தெரிவுக்கு முன்னர் விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள ஏதாவது தகவல் தவறானதெனக் கண்டறியப்பட்டால் நிராகரிக்கப்படுவதற்கு நான் பாத்திரதாரியாவேன் என்பதுடன், தெரிவின் பின்னர் கண்டறியப்பட்டால் எதுவித நஷ்டஈடு இன்றி விலக்கப்படுவதற்கு நான் பாத்திரதாரியாவேன் என்பதையிட்டு அறிந்துள்ளேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

1-644

---

**சுகாதார அமைச்சு**

சுகாதார சேவைகள் திணைக்களம்

**பேச்சுக்கலை பயிற்றுவிப்பாளர் பதவிக்கு ஆட்சேர்த்தல்**

சுகாதார அமைச்சின் நிர்வாகத்தின்கீழ் உள்ள வைத்தியசாலைகளில் பேச்சுக்கலை பயிற்றுவிப்பாளர் பதவிக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இத்துடன் உள்ள மாதிரிப் படிவங்களைப் போன்று அமைத்து 2011.03.15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு கிடைக்கக்கூடியதாகச் "சுகாதார அமைச்சின் செயலாளர், 'சுவசிரிபாய' இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10" என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பேச்சுக்கலை பயிற்றுவிப்பாளர் பதவி" என்று குறிப்பிடப்படல் வேண்டும்.

**2. சம்பளத் திட்டம்.**- ரூபா 15,260-6X180-4X240-11X320-20X360- ரூபா 28,020
(எம்டீ 5-06-2006(IV)

**3. வயது எல்லை.**- 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்குக் கூடாமலும் இருத்தல் வேண்டும். ஏற்கெனவே அரச சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதல்ல.

**4. கல்வித் தகைமை.**- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பேச்சுக்கலை பயிற்றுவிப்பாளர் சம்பந்தமாக 2 வருட கால டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல்.

**5. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்.**- (i) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்திற்கு உரித்துடையது. விதவைகள்/அனாதைகள், விதவைகள் தபுதாரர் ஓய்வூதிய நிதியத்திற்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும்.

(ii) 2007.05.08 ஆந் திகதிய 07/2007 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றுநிருபத்தின்படி அரச மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச மொழியில் சேவைக்குச் சேர்ந்து 5 வருட காலத்தினுள் சித்திபெறுதல் வேண்டும்.

**6. சேவையில் சேர்த்துக்கொள்ளும் முறைகள்.**- போட்டிப் பரீட்சை மூலம் கூடிய புள்ளிகள் பெறுபவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இப்போட்டிப் பரீட்சை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என்பதுடன் இப்பரீட்சையில் பின்வரும் பாடங்கள் அடங்கும் :-

பொது அறிவு - 100 புள்ளிகள்
நுண்ணறிவு - 100 புள்ளிகள்

7. தற்போது அரச சேவையில் உள்ளவர்கள் தங்களது விண்ணப்பத்தை தங்கள் திணைக்களத் தலைவரின் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும்.

**8. பரீட்சைக் கட்டணம்.**- "செயலாளர், சுகாதார அமைச்சு, "சுவசிரிபாய", இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு 10" என்ற முகவரிக்கு எழுதப்பட்டு கொழும்பு பிரதான தபாற் கந்தோரில் மாற்றக்கூடிய ரூபா 250 இற்கான காசுக்கட்டளை பரீட்சைக் கட்டணமாக எல்லாப் பரீட்சார்த்திகளும் செலுத்துதல் வேண்டும். காசுக்கட்டளை விண்ணப்பப்பத்திரத்துடன் அனுப்புதல் வேண்டும். பரீட்சைக் கட்டணம் எதுவித காரணத்தினாலும் திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது.

9. விண்ணப்பப்பத்திரம் அல்லது அது சம்பந்தமான வேறு ஏதாவது கடிதங்கள் சுகாதார அமைச்சின் செயலாளரின் பெயருக்கு அன்றி அமைச்சில் சேவையாற்றும் அலுவலர் ஒருவருக்கு தனிப்பட்ட முறையில் அனுப்பக் கூடாது.

10. முடிவுத் திகதிக்குப் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன், விண்ணப்பப்பத்திரம் கிடைத்தமை பற்றி அறியத்தரப்பட மாட்டாது. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விதிகளுக்கு அமையாத விண்ணப்பப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

11. மேலே குறிப்பிட்ட கல்வித்தகைமையும் ஏனைய தகைமைகளும் அத்துடன் போட்டிப் பரீட்சையில் உயர்மட்ட புள்ளிகளைப் பெற்றவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையின்போது ஆவணங்கள் சமர்ப்பிக்கும்போது அவை மூலப்பிரதிகளாக இருக்க வேண்டும். சமர்ப்பிக்க முடியாதவிடத்து இவரின் நேர்முகப் பரீட்சை இரத்துச் செய்யப்படும்.

12. விண்ணப்பங்களை நிரப்பும்போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகளை மிகவும் கவனமாகவும் சரியாகவும் நிரப்பவும். நியமனங்கள் வழங்கப்பட்ட பின்னரோ சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் போலியானவை எனக் கண்டுபிடிக்கப்படின், சேவையிலிருந்து இடைநிறுத்தப்படவோ அல்லது விலக்குவதற்கும் மற்றும் அரச சேவையில் மீள அனுமதிக்கப்படவோ முடியாதவாறு கருப்புப்பட்டியலில் பெயரை சேர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

13. மேற்கூறப்பட்டபடி சேர்த்துக்கொள்ளப்பட்ட அனைத்து உத்தியோகத்தர்களும் அரச சேவைக்கான அனைத்து சட்டங்களுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின்

விதிகள் மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் கொள்கை அமுலாக்கலுக்கு ஏற்பவும் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் காலத்துக்குக் காலம் ஏற்படுத்தும் அரச சட்ட ஒழுங்கு மாற்றங்களுக்குக் கட்டுப்பட்டு செயற்பட வேண்டும்.

14. இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படாத இப்பதவிக்கு சேர்த்துக்கொள்வது தொடர்பாக எழும் எந்தவொரு விடயத்திற்கும் சுகாதார அமைச்சின் செயலாளரின் முடிவே இறுதியானதாகும்.

(வைத்தியர்) றவீந்ர றுபேரு,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

சுகாதார அமைச்சு,
"சுவசிரிபாய",
இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு 10.
2011.01.10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார சேவை திணைக்களம்**

பேச்சுக்கலை பயிற்றுவிப்பாளர் பதவி

1. 1.1 விண்ணப்பதாரியின் முழுப்பெயர் - திரு./திருமதி/செல்வி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.
உ-ம் : SILVA A.B.
1.2 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.
1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. 2.1 முகவரி - தனிப்பட்ட (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) : ----.
2.2 முகவரி - தனிப்பட்ட (சிங்களத்தில்/தமிழில்) :----.
2.3 முகவரி - அலுவலக (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) : ----.
2.4 முகவரி - அலுவலக (சிங்களத்தில்/தமிழில்) :----.

(அரச சேவை/மாகாண சேவை/கூட்டுத்தாபனம் ஒன்றில் கடமை புரியும் உத்தியோகத்தரானால் அவரது அலுவலக முகவரியைக் குறிப்பிடுதல் வேண்டும். முகவரியில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால் அதை உடனடியாக அறிவித்தல் வேண்டும்.)

3. 3.1 பிறந்த திகதி :

ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

3.2 விண்ணப்பிக்கும் கடைசித் திகதியன்று வயது :

வருடங்கள் : | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

5. பால் :

6. கல்வித் தகைமைகள் :

7. அனுபவம் :

| சேவையாற்றிய இடம் | சேவைக்காலம் | |
|---|---|---|
| | இருந்து | வரை |
| | | |

8. பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்கான விபரம் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :----.
(ii) பற்றுச்சீட்டின் இலக்கமும் திகதியும் :----.
(iii) செலுத்திய தொகை :----.

| பற்றுச்சீட்டினை கழன்று போகாதவாறு இங்கு ஒட்டவும். |
|---|

இவ்விண்ணப்பப்பத்திரத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் உறுதிமொழிகின்றேன். இவற்றுள் அடங்கியுள்ள விபரங்களில் ஏதேனும் பொய்யானவை அல்லது தவறானவை எனக் காணப்படின் தெரிவுக்கு முன்னராயின் தகைமை நீக்கம் செய்யப்படுவதற்கும், நியமனத்திற்கு பின்பு கண்டுபிடிக்கப்படின் நட்டஈடு எதுவுமின்றிப் பதவி நீக்கம் செய்யப்படுவதற்கும் கட்டுப்பாடுடையவனாவேன் என நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

திணைக்களத் தலைவரது சான்றிதழ் :

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
பதவிப்பெயர் :

திகதி :----.

1-649